உ

கணபதி துணை

# சிவபுராணபடன விதி



பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வல முறை இறையே

சைவநீதி இலவச வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணப்பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

1 தேவாரம்

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா வொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே

2 திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப் பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

3 திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

4 திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடி யார்கள் விரைந்துவம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி ஈசற்காட் செய்ம்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றுமென்றும் உள்ள பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

5 பெரியபுராணம்

ஆதியாய் நடுவு மாகி அளவிலா வளவு மாகிச்
சோதியாய் உணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்கும் தில்லைப்பொதுநடம் போற்றிபோற்றி

வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

# சிவபுராணபடன விதி
# விரதங்கள்
# நித்திய கரும அநுட்டானம்

நல்லூர்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

நூல்களில் இருந்து

தொகுத்தவர்

செல்லையா நவநீதகுமார்.

## சமர்ப்பணம்

எனது தந்தை, திரு. மாரிமுத்து அவர்களதும், தாயார், திருமதி. இராசம்மா அவர்களதும் ஆன்மா சாந்தியடைய இச்சைவ நீதி நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.

மா. ப. பாலதுரை

வெளியிடுபவர்
மா. ப. பாலதுரை

உதயா அச்சகம்
17/18, நீர்கொழும்பு வீதி,
வத்தளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் அகவல் - ஔவையார்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகிலாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்டநீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்ட முப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரு மூஷிக வாகன்
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரம்இது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என்செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையி னினிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தனிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கு மனமு மில்லா மனோலயந்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தி னரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயகா விரைகழல் சரணே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கணபதி துணை

## நான்முகம்

புராணம் என்பது பழமையைக்கூறுவது எனப்பொருள்படும். இறைவனைப்பற்றியும், அவன் அருட்திறங்களைப்பற்றியும், நாம் அறியத்துணை புரிபவை புராணங்கள். இவை பாடல்களாக அமைந்துள்ளன. அதனை யாவரும் விளங்குமாறு ஒருவர் அதற்குப்பயன் (பொருள்) சொல்லுவார். இது புராண படனம் எனப்படும்.

புராணபடனம் பன்னெடுங்காலமாக எமது நாட்டில் நடைபெற்று வருகின்றது. இதற்கான ஒரு மரபு பேணப்பட்டு வருகின்றது. பல புராணங்களில் உள்ளவற்றையெல்லாம் திரட்டிச் "சிவபுராண படன விதி" என ஆறுமுகநாவலர் அவர்களால் வெளியிடப்பட்டது.

புராண படனம் எப்படி நிகழவேண்டும் என்பதைச் "சிவபுராண படன விதி" மூலம் மக்களுக்கு அறியப்படுத்த நான் விரும்பினேன். எமது தந்தையின் வழி நடத்தலோடு விரதங்கள் பற்றிய குறிப்பையும், நித்திய கரும அநுட்டானத்தையும் இணைத்துச்சிறு நூலாக்குகின்றேன். இந்நூலை அச்சிட்டு, இலவசமாக விநியோகித்தாற், பலருக்கும் பலன் கிடைக்குமென்று எண்ணி உயர்திரு. பாலதுரை அவர்களிடம் இதுபற்றிக் கூறினேன். ஆன்மீகப்பணி பல அடக்கமாகச் செய்து கொண்டிருக்கும் அவர் இதற்கு உடன்பட்டுத்தாமே இதை வெளியிடுவதற்கு முன்வந்தார். அவருக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

இச்சிறு நூலைப் பெற்றுப்படித்து யாவரும் பயன் பெற்றுய்யுமாறு கேட்டுக்கொண்டு அனைவருக்கும் எம்பெருமான் திருவருள் துணைபுரிய வேண்டிப்பிரார்த்திக்கின்றேன்.

42, டிவாஸ் ஒழுங்கை,
கொழும்பு - 14
ஈசுர ஐப்பசி (1997)

செ. நவநீதகுமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின்

## குமாரஸ்தவம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஓம் | ஷண்முக | பதயே | நமோ | நம |
| ஓம் | ஷண்மத | பதயே | நமோ | நம |
| ஓம் | ஷட்க்ரீவ | பதயே | நமோ | நம |
| ஓம் | ஷட்க்ரீட | பதயே | நமோ | நம |
| ஓம் | ஷட்கோண | பதயே | நமோ | நம |
| ஓம் | ஷட்கோச | பதயே | நமோ | நம |
| ஓம் | நவநிதி | பதயே | நமோ | நம |
| ஓம் | சுபநிதி | பதயே | நமோ | நம |
| ஓம் | நரபதி | பதயே | நமோ | நம |
| ஓம் | ஸுரபதி | பதயே | நமோ | நம |
| ஓம் | நடச்சிவ | பதயே | நமோ | நம |
| ஓம் | ஷடக்ஷர | பதயே | நமோ | நம |
| ஓம் | கவிராஜ | பதயே | நமோ | நம |
| ஓம் | தபராஜ | பதயே | நமோ | நம |
| ஓம் | இஹபர | பதயே | நமோ | நம |
| ஓம் | புகழ்முநி | பதயே | நமோ | நம |
| ஓம் | ஜயஜய | பதயே | நமோ | நம |
| ஓம் | நயநய | பதயே | நமோ | நம |
| ஓம் | மஞ்சுள | பதயே | நமோ | நம |
| ஓம் | குஞ்சரீ | பதயே | நமோ | நம |
| ஓம் | வல்லீ | பதயே | நமோ | நம |
| ஓம் | மல்ல | பதயே | நமோ | நம |
| ஓம் | அஸ்த்ர | பதயே | நமோ | நம |
| ஓம் | சஸ்த்ர | பதயே | நமோ | நம |
| ஓம் | ஷஷ்ட | பதயே | நமோ | நம |
| ஓம் | இஷ்டி | பதயே | நமோ | நம |
| ஓம் | அபேத | பதயே | நமோ | நம |
| ஓம் | ஸுபோத | பதயே | நமோ | நம |
| ஓம் | (வ்) வியூஹ | பதயே | நமோ | நம |
| ஓம் | மயூர | பதயே | நமோ | நம |
| ஓம் | பூத | பதயே | நமோ | நம |
| ஓம் | வேத | பதயே | நமோ | நம |
| ஓம் | புராண | பதயே | நமோ | நம |
| ஓம் | (ப்) பிராண | பதயே | நமோ | நம |
| ஓம் | பக்த | பதயே | நமோ | நம |
| ஓம் | முக்த | பதயே | நமோ | நம |
| ஓம் | அகார | பதயே | நமோ | நம |
| ஓம் | உகார | பதயே | நமோ | நம |
| ஓம் | மகார | பதயே | நமோ | நம |
| ஓம் | விகாச | பதயே | நமோ | நம |
| ஓம் | ஆதி | பதயே | நமோ | நம |
| ஓம் | பூதி | பதயே | நமோ | நம |
| ஓம் | அமார | பதயே | நமோ | நம |
| ஓம் | குமார | பதயே | நமோ | நம |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை நித்தமும் பாராயணம் செய்பவர்கள் மனத்தில் எண்ணியவை சித்தியாகும்.

## ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளிய கந்தர் அநுபூதி

காப்பு

(கலிவிருத்தம்)

நெஞ்சக் கன கல்லு நெகிழ்ந்(து) உருகத்
தஞ்சத்(து) அருள் சண்முகனுக்(கு) இயல்சேர்
செஞ்சொற் புனை மாலை சிறந்திடவே
பஞ்சக்கர ஆனை பதம் பணிவாம்.

### நூல்

1.
ஆடும் பரி, வேல், அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய் !
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனி யானை சகோதரனே.

2.
உல்லாச, நிராகுல, யோக விதச்,
சல்லாப, விநோதனும் நீ அலையோ ?
எல்லாம் அற, என்னை இழந்த நலம்
சொல்லாய், முருகா ! சுரபூபதியே !

3.
வானோ புனல் பார் கனல் மாருதமோ ?
ஞானோ தயமோ ? நவில் நான் மறையோ ?
யானோ ? மனமோ ? எனை ஆண்ட இடம்
தானோ ? பொருளாவது சண்முகனே !

4.
வளைபட்ட கைம் மாதொடு, மக்கள் எனும்
தள்பட்(டு), அழியத் தகுமோ ? தகுமோ ?
கிளைபட்(டு), எழு சூர் உரமும், கிரியும்,
தொளைபட்(டு), உருவத் தொடு வேலவனே !

5.
மக மாயை களைந்திட வல்ல பிரான்
முகம் ஆறும் மொழிந்து மொழிந்திலனே !
அக மாடை, மடந்தையர் என்(று) அயரும்
சக மாயையுள் நின்று தயங்குவதே !

6.
திணியான மனோ சிலை மீது, உனதாள்
அணியார் அரவிந்தம் அரும்பு மதோ ?
"பணி யா ?" என, வள்ளி பதம் பணியும்
தணியா அதிமோக தயா பரனே !

7.
கெடுவாய் மனனே; கதி கேள், கரவாது
இடுவாய், வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடு வேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினை யாவையுமே.

8.
அமரும் பதி, கேள், அகம் ஆம் எனும் இப்
பிமரம் கெட மெய்ப் பொருள் பேசியவா !
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம் பொரு தானவ நாசகனே !

9.
மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டு, ஊசல்படும் பரிசு என்று ஒழிவேன் ?
தட்டு ஊடு அற வேல் சயிலத்(து) எறியும்
நிட்டூர நிராகுல, நிர்ப்பயனே !

10.
கார்மா மிசை காலன் வரில், கலபத்
தேர்மா மிசை வந்து எதிரப் படுவாய்
தார் மார்ப ! வலாரி தலாரி எனும்
சூர்மா மடியத் தொடுவே லவனே !

11.
"கூ கா" என என் நிளை கூடி அழப்
போகா வகை, மெய்ப்பொருள் பேசியவா !
நாகாசல வேலவ ! நாலுகவித்
த்யாகா ! சுரலோக சிகாமணியே !

12.
செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன், பிறவான், இறவான்,
"சும்மா இரு சொல் அற" என்றலுமே,
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13.

"முருகன், தனிவேல் முனி, நம் குரு" என்று
அருள் கொண்டு அறியார் அறியும் தரமோ !
உரு அன்று, அரு அன்று, உளது அன்று, இலது அன்று
இருள் அன்று, ஒளி அன்று என நின்றதுவே.

14.

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்(று)
உய்வாய், மனனே ! ஒழிவாய் ஒழிவாய்
மெய் வாய் விழி நாசியொடும் செவி ஆம்
ஐவாய் வழி செல்லும் அவாவினையே.

15.

"முருகன், குமரன், குகன்" என்று மொழிந்து
உருகும் செயல் தந்து, உணர்(வு) என்(று) அருள்வாய்?
பொரு புங்கவரும், புவியும், பரவும்
குருபுங்கவ ! எண் குண பஞ்சரனே !

16.

பேராசை எனும் பிணியிற் பிணிபட்டு,
ஓரா வினையேன் உழலத் தகுமோ ?
வீரா ! முதுசூர் படவேல் எறியும்
சூரா ! சுரலோக துரந்தரனே !

17.

யாம் ஓதிய கல்வியும், எம் அறிவும்,
தாமே பெற, வேலவர் தந்ததனால்,
பூமேல் மயல்போய், அறம் மெய்ப் புணர்வீர்
நாமே னடவீர், நடவீர் இனியே.

18.

உதியா, மரியா, உணரா, மறவா,
விதிமால் அறியா, விமலன் புதல்வா
அதிகா, அநகா, அபயா ! அமரா
பதி காவல ! சூர பயங்கரனே !

19.

வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடிபோ கியவா !
அடி அந்தம் இலா அயில் வேல் அரசே !
மிடி என்று ஒரு பாவி வெளிப் படினே.

20.

அரிதாகிய மெய்ப் பொருளுக்கு அடியேன்
உரிதா உபதேசம் உணர்த்தியவா !
விரிதாரண ! விக்ரம வேள் ! இமையோர் !
புரிதாரக ! நாக புரந்தரனே !

21.

கருதா மறவா நெறிகாண, எனக்கு
இருதாள் வனசம் தர என்று இசைவாய்
வரதா முருகா ! மயில் வாகனனே !
விரதா ! சுர சூர விபாடணனே !

22.

காளைக் குமரேசன் எனக் கருதித்,
தாளைப் பணியத் தவம் எய்தியவா !
பாளைக் குழல் வள்ளி பதம் பணியும்
வேளைச், சுர பூபதி, மேருவையே !

23.

அடியைக் குறியாது அறியா மையினால்
முடியக் கெடவோ ? முறையோ ! முறையோ !
வடி விக்ரம வேல் மகிபா; குறமின்
கொடியைப் புணரும் குண பூதரனே;

24.

கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேன், அருள் சேரவும் எண்ணுமதோ !
சூர் வேரொடு குன்று தொளைத்த, நெடும்
போர் வேல ! புரந்தர பூபதியே !

25.

மெய்யே என வெவ்வினை வாழ்வை உகந்து
ஐயோ ! அடியேன் அலையத் தகுமோ !
கையோ, அயிலோ, கழலோ முழுதும்
செய்யோய் ! மயில் ஏறிய சேவகனே !

26.

ஆதாரம் இலேன், அருளைப் பெறவே
நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே !
வேதாகம ஞான விநோத ! மனோ
தீதா ! சுரலோக சிகாமணியே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27.

மின்னே நிகர் வாழ்வை விரும்பிய யான்
என்னே ! விதியின் பயன் இங்கு இதுவோ ?
பொன்னே! மணியே! பொருளே! அருளே!
மன்னே ! மயில் ஏறிய வானவனே !

28.

ஆனா அமுதே ! அயில்வேல் அரசே;
ஞான கரனே நவிலத் தகுமோ ?
யான் ஆகிய என்னை விழுங்கி, வெறும்
தானாய் நிலை நின்றது, தற்பரமே.

29.

இல்லே எனும் மாயையில் இட்டனை நீ,
பொல்லேன் அறியாமை பொறுத்திலையே,
மல்லேபுரி பன்னிரு வாகுவில், என்
சொல்லே புனையும் சுடர் வேலவனே !

30.

செவ்வான் உருவில் திகழ் வேலவன், அன்று
ஒவ்வாதது என உணர்வித் ததுதான்
அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால்
எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப் பதுவே ?

31.

"பாழ்வாழ்வு எனும் இப் படுமாயையிலே
வீழ்வாய்" என, என்னை விதித்தனையே ! ?
தாழ்வானவை செய்தன தாம் உளவோ
வாழ்வாய் இனிநீ மயில் வாகனனே !

32.

கலையே பதறிக் கதறித், தலையூடு
அலையே படுமாறு, அதுவாய் விடவோ ?
கொலையே புரி வேடர் குலப் பிடிதோய்
மலையே ! மலைகூறிடு வாகையனே.

33.

சிந்தாகுல இல்லொடு, செல்வம் எனும்
விந்தாடவி, என்று விடப் பெறுவேன் ?
மந்தாகினி தந்த வரோதயனே !
கந்தா ! முருகா ! கருணா கரனே !

34.

சிங்கார மடந்தையர் தீநெறி போய்
மங்காமல், எனக்கு வரம் தருவாய்
சங்க்ராம சிகா வல ! சண்முகனே !
கங்காநதி பால ! க்ருபாகரனே !

35.

விதிகாணும் உடம்பை விடா வினையேன்,
கதிகாண, மலர்க் கழல் என்று அருள்வாய் ?
மதிவாள் நுதல் வள்ளியை அல்லது, பின்
துதியா விரதா ! சுரபூ பதியே !

36.

"நாதா ! குமரா ! நம !" என்று அரனார்
"ஓதாய் என, ஓதியது எப்பொருள் தான் ?
வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்
பாதா ! குறமின் பத சேகரனே !

37.

"கிரிவாய் விடு விக்ரம வேல் இறையோன்
பரிவாரம்" எனும் பதம் மேவலையே
புரிவாய் மனனே ! பொறையாம் அறிவால்
அரிவாய், அடியோடும் அகந்தையையே.

38.

ஆதாளியை, ஒன்று அறியேனை, அறத்
தீது ஆளியை, ஆண்டது செப்புமதோ !
கூதாள கிராத குலிக்கு இறைவா !
வேதாள கணம் புகழ் வேலவனே !

39.

மாஏழ் சனனம் கெட, மாயை விடா
மூஏடணை என்று முடிந்திடுமோ !
கோவே குறமின் கொடிதோள் புணரும்
தேவே சிவசங்கர தேசிகனே !

40.

வினை ஓட விடும் கதிர்வேல் மறவேன்,
மனையோடு தியங்கி மயங்கிடவோ ?
சுனையோடு, அருவித் துறையோடு, பசுந்
தினையோடு, இதணோடு திரிந்தவனே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41.

சாகாது, எனையே சரணங் களிலே
கா கா, நமனார் கலகம் செயும் நாள்
வாகா ! முருகா ! மயில் வாகனனே !
யோகா ! சிவஞான உபதேசிகனே !

42.

குறியைக் குறியாது குறித்து அறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்,
செறிவு அற்று, உலகோடு உரை சிந்தையும் அற்று
அறிவு அற்று, அறியாமையும் அற்றதுவே.

43.

தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினது அன்பு அருளால்,
ஆசா நிகளம் துகளாயின் பின்,
பேசா அநுபூதி பிறந்ததுவே.

44.

சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும்படி தந்தது சொல்லு மதோ ?
வீடும் சுரர் மாமுடி, வேதமும், வெம்
காடும், புனமும் கமழும் கழலே.

45.

கரவாகிய கல்வி உளார் கடைசென்று,
இரவா வகை மெய்ப்பொருள் ஈகுவையோ ?
குரவா ! குமரா ! குலிசாயுத ! குஞ்
சரவா ! சிவயோக தயாபரனே !

46.

எமதாயும், எனக்கு அருள் தந்தையும் நீ,
சிந்தாகுலம் ஆனவை தீர்த்துஎனையாள்,
கந்தா ! கதிர் வேலவனே ! உமையாள்
மைந்தா ! குமரா ! மறை நாயகனே !

47.

ஆறு ஆறையும் நீத்து, அதன்மேல் நிலையைப்
பேறா அடியேன், பெறுமாறு உளதோ ?
சீறாவரு சூர் சிதைவித்து, இமையோர்
கூறா உலகம் குளிர்வித் தவனே !

48.

அறிவு ஒன்று அற நின்று, அறிவார் அறிவில்
பிறிவு ஒன்று அற நின்ற, பிரான் அலையோ ?
செறிவு ஒன்று அற வந்து, இருளே சிதைய,
வெறி வென்றவரோடு உறும் வேலவனே !

49.

தன்னந் தனி நின்றது, தான் அறிய
இன்னம் ஒருவர்க்கு இசைவிப் பதுவோ ?
மின்னும் கதிர்வேல் விகிர்தா ! நினைவார்
கின்னம் களையும் க்ருபை சூழ் சுடரே !

50.

மதிகெட்டு, அற வாடி, மயங்கி அறக்
கதிகெட்டு, அவமே கெடவோ கடவேன் ?
நதி புத்திர ! ஞான சுகாதிப ! அத்
திதி புத்திரர் வீறு அடு சேவகனே !

51

உருவாய் அருவாய், உளதாய் இலதாய்,
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்,
கருவாய் உயிராய், கதியாய் விதியாய்க்,
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே !

## கந்தர் அநுபூதி முற்றிற்று

******

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணபடன விதி

நால்வகையோனிகளுள் ஒருயோனிவாய்பட்டுப் பிறப்பவையாவை அவையெல்லாம் பசுக்கள், அப்படிப்பிறத்தலில்லாதது யாது அது பதிப்பொருள் என்னும் இதுவொன்றே எளிதில் அவ்விரண்டுக்கும் தம்முள் வேற்றுமை அறியும்வண்ணம் நிற்பது. ஆதலால், வேதம் புராணம் இதிகாசம் முதலிய நூல்களிலே மற்றைத் தேவர்களெல்லாம் அப்படிப்பிறந்திறத்தல் சொல்லப்படுவதாலும், சிவபெருமானுக்கு அது உண்டென்பது எங்காயினும் சொல்லப்படாமையாலும், அநாதிமுத்த சித்துருவாகிய முழுமுதற்கடவுள் சிவபெருமானே என்பது தெள்ளிதிற்றுணியப்படும்.

### சிவஞானசித்தியார்

யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு
மாதலா லிவையி லாதா னறிந்தருள் செய்வ னன்றே.

### அருணகிரியந்தாதி

எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தேநஞ் சோணேச ‑ரில்லிற்
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட்டி லேம்.

2. இப்படித் துணியப்படும் முன்னைப்பழம்பொருட்கும் முன்னைப்பழம்பொருளாகிய சிவபெருமானை வேதசிவாகம விதிப்படி மெய்யன்போடு வழிபடுவோர் சைவசமயிகள் என்றும், சிவனடியார்கள் என்றும் சொல்லப்படுவார்கள். இச்சைவர்கள் பலசமயத்தாருக்கும் பொதுவாகையால் வேண்டப்படும் இலக்கணங்களை முன்னே வழுவாது தழுவிக்கொண்டே பின்பு தங்களுக்குச் சிறப்புவகையால் வேண்டப்படும் இலக்கணங்களை உடையவர்களாய் ஒழுகல்வேண்டும்.

3. பொதுவிலக்கணங்களாவன; கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறர்மனை நயவாமை, வரைவின்மகளிர் நயவாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய் தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம். இந்நன்மைகளில்லாத கிரியை ஞானங்கள் சிறிதும் பயன்படாவாம்.

### பட்டணத்துப்பிள்ளையார் பாடல்

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவ ரோடிணங் காமற் கனவினும்பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணபடன விதி

## சிவஞானதீபம்

கொலையாதி நெறியகன்ற ஞானந் தானே
கூறரிய மேலான ஞான மாகுங்
கொலையாதி யகன்றொழுகுந் தவங்க டாமே
குற்றமிலா நற்றவமென் றுரைக்கு நூலுங்
கொலையாதி யகற்றியநல் லறங்க டாமே
குவலயத்தி லொப்பரிய வறங்க ளாகுங்
கொலையாதி யகன்றுபெறுஞ் செல்வந் தானே
கூறினுயிர்க் கிதமான வாழ்வதாமே.

எவ்வுயிரும் பராபரன்சந் நிதிய தாகு
மிலங்குமுயி ருடலனைத்து மீசன்கோயி
லெவ்வுயிரு மெம்முயிர்போ லென்று நோக்கி
யிரங்காது கொன்றருந்து மிழிவி னோரை
வவ்வியமன் றூதரருந் தண்டஞ் செய்து
வல்லிரும்பை யுருக்கியவர் வாயில் வார்த்து
செவ்வியதீ யெழுநரகில் வீழ்த்தி மாறா
வேதனைசெய் திடுவரென வோது நூலே.

## பதிபசுபாச விளக்கம்

அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி
யிம்மா னுடரெல்லா மின்புற் றிருக்கின்றா
ரம்மா வெனுஞ்சத்தங் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நிரயமென்றாற் புசித்தவர்க்கென் சொல்லுவதே.

கங்கையிற் படிந்திட் டாலுங் கடவுளைப் பூசித் தாலு
மங்குல்போற் கோடி தானம் வள்ளலாய் வழங்கி னாலும்
சங்கையி லாத ஞான தத்துவ முணர்ந்திட்டாலும்
பொங்குறு புலால்பு சிப்போன் போய்நர கடைவ னன்றே.

கொலையிலா னுதவு மன்னங் கூறிற்பே ரமுத மாகுங்
கொலையுளா னுதவு மன்னங் கூறிற்பேர் விடமதாகும்
புலையர்த மனையி லுண்போன் புலையனா மாறு போலக்
கொலைஞர்த மனையி லுண்போன் கொலைஞனே யாவ னன்றே.

கலையெலா முணர்ந்தா னேனுங் கரிசறத் தெளிந்தா னேனு
மலையென வுயர்ந்தா னேனு மனமய லகன்றா னேனு
முலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய கையனேனு
மிலகிய விரக்க மின்றேலெழுநர கடைவ னன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபுராணபடன விதி

### கூர்மபுராணம்

கள்விலை பகர்வோர் கள்ளினை நுகர்ந்தோர் கள்ளருந் துதற்குடன் படுவோர்
கள்ளருந் துநரை மகிழுநர் நரகிற் கற்பகா லங்கிடந் தழுந்தி
யெள்ளுறுந் தீய மலப்புழு வாகி மலத்தினை நுகர்ந்துபின் னிறந்து
வின்ளருங் கொடிய ரௌரவ நரகின் மீட்டுமீட் டுழந்துநாள் கழிப்பார்.

### திருவிளையாடற்புராணம்

காமமே கொலைகட் கெல்லாங் காரணங் கண்ணோ டாத
காமமே களவுக் கெல்லாங் காரணங் கூற்ற மஞ்சுங்
காமமே கள்ளுண் டற்குங் காரண மாதலாலே
காமமே நரகபூமி காணியாக் கொடுப்ப தென்றான்.

4. சிறப்பிலக்கணங்கள்: புறத்திலக்கணம், உடலிலக்கணம், அகத்திலக்கணம், என மூவகைப்படும். அவற்றுள், புறத்திலக்கணம் பத்து; உடலிலக்கணம் பத்து; அகத்திலக்கணம் மூன்று. ஆகச்சிவனடியாரிலக்கணம் இருபத்து மூன்று.

### உபதேசகாண்டம்

செய்ய மேனிச் சிவனடி யார்க்கய
லெய்தக் காணு மிலக்கணம் பத்துள
மெய்யி லெய்து மிலக்கண மெய்மைசா
லையி ரண்டகத் துள்ளன மூன்றரோ.

அலக்க ணீக்கு மரனடி யார்க்கென
விலக்க ணங்க ளிருபத்து மூன்றுள
பலப்ப டுத்து முதற்படு பத்தையும்
புலப்ப டுத்தி நுமக்குப் புகலுவாம்.

5. புறத்திலக்கணம் பத்தாவன: விபூதி, உருத்திராக்ஷம் என்னுஞ் சிவசின்னங்களைத் தரித்தல், குருவை வழிபடல், சிவபெருமானைத்தோத்திரஞ் செய்தல், சிவநாமங்களை உச்சரித்தல், சிவபெருமானைப் பூசைசெய்தல், சிவதருமங்களைச்செய்தல், சிவபுராணங்களைக்கேட்டல், சிவாலயதரிசனஞ் செய்தல், சிவனடியாரிடத்தன்றிப் பிறரிடத்துப்போசனம் பண்ணாமை, சிவனடியார்களுக்குக் கொடுத்தல் என்பவைகளாகும்.

### உபதேசகாண்டம்

வாசப் பூதி யுருத்திர மாமணி
பூசிப் பூணல் குரவரைப் பூசித்த
லாசைப் பாட்டி னரனைப் புகழுத
லீசற் குள்ளன நாம மியம்புதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணபடன விதி

எந்தை யீச னருச்சனை யோம்புத
றந்தி ரச்சிவ தன்மம் புரிகுதன்
முந்தை யோன்கதை கேட்டன் முறைமையாற்
புந்தி கூர்ந்தர னாலயம் போற்றுதல்.

ஒத்த பத்த ரிடத்தல தோரிடந்
தூய்த்த னீத்தலத் தொண்டரிற் றொண்டராய்ச்
சித்த மன்புற வீதன் முன் செப்பிய
பத்து மீங்கிவை காணப் படுதிரால்.

6. உடலிலக்கணம் பத்தாவன: சிவபெருமானுடைய பெருமையைச்சிந்திக்குந்தோறும் பேசுந்தோறும் கண்டம் விம்முதல், நாக்குத்துடித்தல், உதடு துடித்தல், சரீரநடுங்குதல், உரோமஞ் சிலிர்த்தல், குறுவேர்வை கொள்ளல், நாக்குத் தழுதழுத்தல், ஆனந்தக்கண்ணீர் சொரிதல், வாய்விட்டழுதல், பரவசமாய்த் தன்னை அயர்த்தல் என்பவைகளாம்.

## உபதேசகாண்டம்

தொண்டர் மெய்யிற் றுலங்கு மிலக்கண
முண்டொர் பத்தென் றுரைத்த துரைக்குதுங்
குண்டை யூர்தி சிவத்தியல் கூறுங்காற்
கண்ட முற்றொரு விம்மிதங் காட்டுதல்.

ஏத்து மெந்தை யியற்கை யுணர்தொறு
நாத்து டித்தெழும் பாமை நகைப்புறம்
பூத்த முத்தந் துடித்தல்வி பூதிகொண்
டார்த்த ணிந்ததன் னங்கங் குலுங்குதல்.

மயிர்ப்பு றம்புள கித்தல் வரன்முறை
வியர்த்த றன்வச மன்றி விளம்புநாப்
பெயர்த்தி டாமையா னந்தப் பெருங்கணீ
ரயர்ப டுத்துதல் வாய்விட்டழுதலே.

பரவ சத்தின னாகிப் படர்சடை
யரனு ளப்படத் தன்னை யயர்க்குதல்
விரவு பத்தும் விடுத்துரைத் தோமிலை
வரமு னித்தலை வீர்மனக் கொள்விரால்.

7. அகத்திலக்கணம் மூன்றாவன: பஞ்சாக்ஷரத்தை மானதமாகச் செபித்தல், மானத பூசை, சிவபெருமானைத் தன்னோடு பிரிவறக் காண்டல் என்பவைகளாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணபடன விதி

## உபதேசகாண்டம்

உளத்தி லக்கண முன்றென் றுரைத்தன
மளக்கி னஞ்செழுத் துன்ன லகப்பட
வளர்க்கு மானத பூசனை மைக்கடுக்
களத்த னைத்தனை யொன்றெனக் காண்குதல்.

8. இவ்விருபத்து மூன்றிலக்கணங்களுள் ஒன்றாகிய சிவபுராணங்கேட்டல் தான் ஓரிலக்கணமாய் நிற்றலன்றித் தன்னையும் தன்னையொழிந்த சிறப்பிலக்கணங்களையும் மற்றைப் பொதுவிலக்கணங்களையும் வருவித்தற்குக் கருவியாயும் நிற்றலுடையது. யாதினாலெனின் விபூதி ருத்திராக்ஷதாரணம் முதலிய புண்ணியங்களையும் அவற்றின் பயனாகிய இன்பத்தையும் கொலை முதலிய பாவங்களையும் அவற்றின் பயனாகிய துன்பத்தையும் அறிவிப்பது சிவபுராண மாகலினென்க. ஆதலால், சைவசமயிகள் யாவரும் சிவபுராணங்கேட்டல் வேண்டுமென்பது துணிவு.

9. புராணங்கள் பதினெட்டு. அவையாவன: பிரமபுராணம், பதுமபுராணம், வைணவ புராணம், சைவபுராணம், பாகவதபுராணம், பவிடியபுராணம், நாரதீயபுராணம், மார்க்கண்டேய புராணம், பிரமகைவர்த்தபுராணம், இலிங்கபுராணம், வராகபுராணம், காந்தபுராணம், வாமன புராணம், மற்சபுராணம், கூர்மபுராணம், காருடபுராணம், பிரமாண்டபுராணம், என்பனவாம். இப்பதினெட்டும் நாலிலஷத் தெண்ணாயிரங் கிரந்தமுடையன.

10. அவற்றுள்: சைவபுராணம், பவிடியபுராணம், மார்க்கண்டேயபுராணம், இலிங்க புராணம், காந்தபுராணம், வராகபுராணம், வாமனபுராணம், மற்சபுராணம், கூர்மபுராணம், பிரமாண்டபுராணம், என்னும் பத்துஞ் சிவபுராணங்கள். இவற்றுள், சைவபுராணம் இருபத்து நாலாயிரங் கிரந்தமும், பவிடியபுராணம் முப்பத்தோராயிரங் கிரந்தமும், மார்க்கண்டேய புராணம் முப்பத்தீராயிரங் கிரந்தமும், இலிங்கபுராணம் பதினோராயிரங் கிரந்தமும், காந்த புராணம் இலக்ஷங்கிரந்தமும், வராகபுராணம் இருபத்துநாலாயிரங் கிரந்தமும், வாமன புராணம் பதினாலாயிரங் கிரந்தமும், மற்சபுராணம் பதினாலாயிரங் கிரந்தமும், கூர்மபுராணம் ஆறாயிரங் கிரந்தமும், பிரமாண்டபுராணம் பன்னீராயிரங் கிரந்தமும் உடையன. ஆகச்சிவ புராணம் பத்துக்குங் கிரந்தம் இரண்டிலக்ஷத் தறுபத்தெண்ணாயிரம்.

11. காருடபுராணம், நாரதீயபுராணம், வைணவபுராணம், பாகவதபுராணம் என்னும் நான்கும் விட்டுணுபுராணங்கள்: இவற்றுள், காருடபுராணம் ஆறாயிரங்கிரந்தமும், நாரதீய புராணம் இருபத்தையாயிரங்கிரந்தமும், வைணவபுராணம் ஆறாயிரங்கிரந்தமும், பாகவத புராணம் பதினெண்ணாயிரங்கிரந்தமும் உடையன. ஆக விட்டுணுபுராண நான்கிற்குங் கிரந்தம் ஐம்பத்தையாயிரம்.

12. பிரமபுராணம் பதுமபுராணம் என்னுமிரண்டும் பிரமபுராணங்கள். இவற்றுள், பிரமபுராணம் பதினாயிரங்கிரந்தமும், பதுமபுராணம் ஐம்பத்தையாயிரங்கிரந்தமும் உடையன. ஆகப்பிரமபுராணம் இரண்டிற்கும் கிரந்தம் அறுபத்தையாயிரம்.

13. ஆக்கினேயம் அக்கினிபுராணம் இது எண்ணாயிரங்கிரந்தமுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணபடன விதி

14. பிரமகைவர்த்தம் சூரியபுராணம். இது பன்னீராயிரங்கிரந்தமுடையது.

15. சிவபுராணங்கள் பத்தும் சாத்துவிகங்களாம். சத்துவகுணம் வெண்ணிறமுடையதும் சுகத்துக்கும் ஞானத்துக்கும் இடமுமாம். யோகிகளுக்கு ஞானம் உபதேசிக்குஞ் சிவபெருமான் தெளிபளிங்கு வடிவினராய் எங்குமுறங்காது பிராமணாதிபதியாயிருப்பர்.

16. விட்டுணுபுராணநான்கும் தாமசங்களாம். தமோகுணம் கருநிறமுடையதும், உதாசீனரூபமும் கூடகிருத்தியசமர்த்தமுமாம். நித்திரை, சோம்பு, பிரமாதம், வஞ்சனம் முதலியவைகள் தாமசங்கள். விட்டுணு கரியரும் சேஷசயனஞ்செய்வோரும் பத்தரை மோகிப்பவருமாயிருப்பர்.

17. பிரமபுராணம் இரண்டும் இராசசங்களாம். இரசோகுணம் சிவந்த நிறமுடையதும், துக்கத்துக்கிடமும், சஞ்சலரூபமுமாம், பிரமா செந்நிறமுடையராய்ச் சஞ்சலரூபியாயிருப்பர்.

18. அக்கினிபுராணமும் சூரியபுராணமும் திரிகுணயுத்தமாம். அக்கினியுஞ் சூரியனும் முக்குணவடிவினராயிருப்பர்.

19. ஆதலால், இப்பதினெட்டினுள்ளுஞ் சிவபுராணங்கள் பத்துமே உயர்ந்தனவாம். ஆகையாற் சிவனடியார்கள் சிவபுராணங்களையே விதிப்படி மெய்யன்போடு கேட்கக்கடவர்கள்.

## உபதேசகாண்டம்

நடத்து மூவறு சரிதையுண் முக்கணன் சரிதைநா யகமென்றே
யெடுத்து ரைப்பது சுருதிமற் றாகம மிப்படி யெடுத்தோதுங்
கடுக்க ளத்தனுக் கன்புடைத் தாகிய புராணகா தையை யன்னோன்
றொடுத்த சோதிமா மயமெனப் பகர்வர்நற் றொண்டரிற் றலைநின்றோர்.

வேட்டு நிற்சிவ பதவியே வேட்டுற விரும்பிக்
கேட்டு நிற்சிவ புராணமே கேட்டுற வினைகொண்
டாட்டு மன்பதை யீறுகண் டந்தகன் றூதர்
வீட்டு முன்னரே சிவத்தினில் விருப்புற வேண்டும்.

20. சிவபுராணம் படித்துப் பொருள் சொல்லுதற்கு உரிய இடங்களாவன: தேவாலயம், திருமடம், நதிக்கரை, குளக்கரை, திருநந்தவனம், யாகசாலை முதலிய சுத்தஸ்தானங்களாம்.

## உபதேசகாண்டம்

புண்ணி யச்சிவ புராணமோ திப்பொருள் விரிப்பி
னண்ண லாலய நதிக்கரை குளக்கரை யன்றேன்
மண்ணு றுந்திரு மடமெனு மித்தலை மருவிக்
கண்ணு தற்பர னைத்தொழு தோதுறக் கடவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணபடன விதி

நால்வகையோனிகளுள் ஒருயோனிவாய்ப்பட்டுப் பிறப்பவையாவை அவையெல்லாம் பசுக்கள். அப்படிப்பிறத்தலில்லாதது யாது அது பதிப்பொருள் என்னும் இதுவொன்றே எளிதில் அவ்விரண்டுக்கும் தம்முள் வேற்றுமை அறியும்வண்ணம் நிற்பது. ஆதலால், வேதம் புராணம் இதிகாசம் முதலிய நூல்களிலே மற்றைத் தேவர்களெல்லாம் அப்படிப்பிறந்திறத்தல் சொல்லப்படுவதாலும், சிவபெருமானுக்கு அது உண்டென்பது எங்காயினும் சொல்லப்படாமையாலும், அநாதிமுத்த சித்துருவாகிய முழுமுதற்கடவுள் சிவபெருமானே என்பது தெள்ளிதிற்றுணியப்படும்.

### சிவஞானசித்தியார்

யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு
மாதலா லிவையி லாதா னறிந்தருள் செய்வ னன்றே.

### அருணகிரியந்தாதி

எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தேநஞ் சோணேச-ரில்லிற்
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட்டி லேம்.

2. இப்படித் துணியப்படும் முன்னைப்பழம்பொருட்கும் முன்னைப்பழம்பொருளாகிய சிவபெருமானை வேதசிவாகம விதிப்படி மெய்யன்போடு வழிபடுவோர் சைவசமயிகள் என்றும், சிவனடியார்கள் என்றும் சொல்லப்படுவார்கள். இச்சைவர்கள் பலசமயத்தாருக்கும் பொதுவாகையால் வேண்டப்படும் இலக்கணங்களை முன்னே வழுவாது தழுவிக்கொண்டே பின்பு தங்களுக்குச் சிறப்புவகையால் வேண்டப்படும் இலக்கணங்களை உடையவர்களாய் ஒழுகல்வேண்டும்.

3. பொதுவிலக்கணங்களாவன: கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறர்மனை நயவாமை, வரைவின்மகளிர் நயவாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய் தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம். இந்நன்மைகளில்லாத கிரியை ஞானங்கள் சிறிதும் பயன்படாவாம்.

### பட்டணத்துப்பிள்ளையார் பாடல்

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவ ரோடிணங் காமற் கனவினும்பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணபடன விதி

## சிவஞானதீபம்

கொலையாதி நெறியகன்ற ஞானந் தானே
கூறரிய மேலான ஞான மாகுங்
கொலையாதி யகன்றொழுகுந் தவங்க டாமே
குற்றமிலா நற்றவமென் றுரைக்கு நூலுங்
கொலையாதி யகற்றியநல் லறங்க டாமே
குவலயத்தி லொப்பரிய வறங்க ளாகுங்
கொலையாதி யகன்றுபெறுஞ் செல்வந் தானே
கூறினுயிர்க் கிதமான வாழ்வதாமே.

எவ்வுயிரும் பராபரன்சந் நிதிய தாகு
மிலங்குமுயி ருடலனைத்து மீசன்கோயி
லெவ்வுயிரு மெம்முயிர்போ லென்று நோக்கி
யிரங்காது கொன்றருந்து மிழிவி னோரை
வவ்வியமன் றூதரருந் தண்டஞ் செய்து
வல்லிரும்பை யுருக்கியவர் வாயில் வார்த்து
செவ்வியதீ யெழுநரகில் வீழ்த்தி மாறா
வேதனைசெய் திடுவரென வோது நூலே.

## பதிபசுபாச விளக்கம்

அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி
யிம்மா னுடரெல்லா மின்புற் றிருக்கின்றா
ரம்மா வெனுஞ்சத்தங் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நிரயமென்றாற் புசித்தவர்க்கென் சொல்லுவதே.

கங்கையிற் படிந்திட் டாலுங் கடவுளைப் பூசித் தாலு
மங்குல்போற் கோடி தானம் வள்ளலாய் வழங்கி னாலும்
சங்கையி லாத ஞான தத்துவ முணர்ந்திட்டாலும்
பொங்குறு புலால்பு சிப்போன் போய்நர கடைவ னன்றே.

கொலையிலா னுதவு மன்னங் கூறிற்பே ரமுத மாகுங்
கொலையுளா னுதவு மன்னங் கூறிற்பேர் விடமதாகும்
புலையர்த மனையி லுண்போன் புலையனா மாறு போலக்
கொலைஞர்த மனையி லுண்போன் கொலைஞனே யாவ னன்றே.

கலையெலா முணர்ந்தா னேனுங் கரிசறத் தெளிந்தா னேனு
மலையென வுயர்ந்தா னேனு மனமய லகன்றா னேனு
முலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய கையனேனு
மிலகிய விரக்க மின்றே லெழுநர கடைவ னன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணபடன விதி

## பிரமோத்தரகாண்டம்

மூவ ராதி முழுதுல கத்துள
தேவர் வாழுஞ் சினகர முன்னருந்
தூவு தண்ணற வுண்டு சுரும்பிமிர்
பூவர் சோலைப் புனித விடத்தினும்

தீதி லாத செழுநதி தீர்த்துங்
கோதி லார்கள் குழீஇய விடத்தினும்
வேத வேதியர் வேள்வித் தலையினு
மாதி மாதவ ரம்மனை முற்றத்தும்.

மற்றும் வேறுள புண்ணிய மல்குசீ
ருற்ற தெவ்விட மவ்விடத் தோதுவர்
பற்றி நாளும் பரமன் றிருக்கதை
முற்று மோதி முழுதுணர் கேள்வியார்.

21. சிறியோர்கள் களிக்குமிடத்திலும், சூதாடுமிடத்திலும், பெண்கள் உண்டாட்டுச் செய்யுமிடத்திலும், அறிவில்லாதவர்கள் இருக்குமிடத்திலும் புராணம் படிக்கலாகாது.

## பிரமோத்தரகாண்டம்

சிறியர் தீக்களி செய்யு மிடத்தினு
மறிவி லாளர்சூ தாடு மரங்கினு
முறவில் வஞ்சிய ருண்டாட் டிடத்தினும்
பொறியி லாளர் பொருந்து மிடத்தினும்.

கம்ப மால்கரி நல்கினும் கண்ணக
னிம்பர் நாடு முழுவது மீயினுஞ்
செம்பொன் மாரி பொழியினுஞ் செஞ்சடை
நம்பன் காதை நயந்து நவிற்றிடார்.

22. திருக்கோயிலிலே சிவபுராணமண்டபஞ்செய்வித்து, அதிலே சிவபுராணபுத்தகத்தைப் பீடத்தின்மீது வைத்து, நாடோறும் விதிப்படி பூசை செய்துகொண்டுவரின், அது கோடிசிவலிங்கப் பிரதிட்டைக்குச் சமமாகும்.

## உபதேசகாண்டம்

எந்தை கோயிலுட் டிருமுறை மண்டப மெடுத்துத்
தந்த பீடிகைத் தலத்தினிற் றிருமுறை தந்து
சிந்தை யன்பினோ டாங்கதற் கருச்சனை செய்தா
லுந்து மேற்றினன் பிரதிட்டை கோடியொப் புறுமால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணபடன விதி

23. சிவபுராணம் படித்துப் பொருள் சொல்லுதற்கு அதிகாரிகளாவார் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நான்குவருணத்துட்பட்டவராய், உடற்குற்றங்கள் இல்லாதவராய், நல்லொழுக்கமுடையவராய், நிகண்டுகற்று இலக்கியவாராய்ச்சிசெய்து இலக்கணநூலிற் பயின்றவராய், சந்தியாவந்தனம் சிவபூசை முதலிய நித்தியகருமங்களைத் தவறாமல் விதிப்படி சிரத்தையோடு செய்பவராயுள்ளவர்.

### உபதேசகாண்டம்

பெருகுநூற் புராண மோதிப் பிரித்துரைத் திடுவோனான்கு
வருணத்தி லொருவ னாகிப் பொறையொடு மரபி னோங்கி
முருகவே ளடிக்கீழ்த் தொண்டு முயன்றவ னாகி யம்பொற்
றிருவொடுந் தனய ரோடுங் கிளையொடுஞ் சிறக்க வேண்டும்.

### சிவஞானதீபம்

நிலையுறுதி யாசார மொழுக்கஞ் சீல
நிறையறிவு கருணைதவ நெறிநி லாமற்
கொலைகளவு கட்காம முதலா வுள்ள
கொடும்பவமே தவமாகக் கொள்ளுந் தீயோ
ருலைவிலருஞ் சிவனருணூ லோத லாகா
தோதினுமங் கவருரைகொள் ளொணாது நீலம்
புலையர்மரு விடுந்தெருவிற் பொல்லாக் கும்பி
பொருந்தியிடுங் குழியதனுட் பூத்த தாமே.

24. சிவபுராணஞ் சுபதினத்திற் சுபமுகூர்த்தத்தில் ஆரம்பித்தல் வேண்டும். ஆரம்பிக்குந் தினத்திலும், முடிக்குந் தினத்திலும், திருக்கல்யாண முதலிய சுபசரித்திரங்கள் படிக்குந்தினங்களினும், சிவபுராணமண்டபத்தைக் கோமயத்தினாலே திருமெழுகிட்டுக் கமுகுகளையும் வாழைகளையும் கரும்புகளையும் நாட்டி மேற்கட்டி கட்டி, கொய்யப்பட்ட பட்டுக்களையும் பூமாலைகளையுந்தூக்கி அலங்கரித்தல்வேண்டும். சிவபுராணபோதகர் நாடோறும் ஸ்நானஞ்செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரமிரண்டு தரித்துச் சந்தியாவந்தனமும் சிவபூசையும் முடித்துக்கொண்டு, சிவபுராண புத்தகத்தைப் பீடத்தின்மீது வைத்துச் சந்தனம் புட்பம் தூபம் தீபம் முதலியவற்றினாலே பூசைசெய்து நமஸ்காரம்பண்ணி, ஆசனத்திருந்துகொண்டு புராணம் போதித்தல் வேண்டும். அவர் அங்கு யாரையும் அஞ்சலி செய்தலாகாது.

### உபதேசகாண்டம்

மங்கல தினத்திற் றேவ ராலயங் குரவர் வாயில்
பொங்குநீர் நதியின் பாங்கர் புண்ணிய தலங்கண் மன்றந்
தங்குகோ மயத்தா னீவித் தண்மலர்த் தொடைய ணாற்றி
யங்கண்மாக் கரும்பு வாழை தீபமிட் டமையச் செய்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணபடன விதி

பட்டுடை கொய்து நாற்றிப் பசுங்கமு கமைத்துப் பின்ன
ரிட்டபொற் பீடந் தன்னிற் புத்தக மினிதி னேற்றி
மட்டுவார் தூபஞ் சாந்த மலரினா லருச்சித் தாங்க
ணட்டவர் கிளைஞ ரோடுங் கேட்பது நன்மைத் தாமால்.

### பிரமோத்தரகாண்டம்

ஓங்கு சீர்த்திருக் காதை யுரைக்குநர்
தாங்கு பீடிகை யின்றித் தரையிரா
ராங்கண் யாரையு மஞ்சலி செய்திடார்
தீங்கி னோருறை சிற்றவை சேர்ந்திடார்.

25. சிவபுராணங் கேட்போர் நாடோறும் ஸ்நானஞ்செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்து நித்தியகருமமுடித்துக்கொண்டு புத்தகபூசை முற்றியவுடனே சிவபுராண போதகரைக் கிழக்குமுகமாக ஆசனத்திருத்திச் சிவபெருமானாகப் பாவித்துச் சந்தனம் புஷ்பம் முதலியவைகளினாலே பூசித்து நமஸ்காரஞ்செய்து, சுற்றத்தார்களோடும் சிநேகிதர்களோடும், சித்திரப்பாவைபோல அசைவற மௌனமாக இருந்து, மெய்யன்போடு கேட்டுக்கொண்டு மீட்டும் நமஸ்காரஞ் செய்தல்வேண்டும்.

### உபதேசகாண்டம்

ஏசறு புராண காதை படித்தெடுத் திசைப்போர்க் கென்ன
வாசன மளித்துப் பூவாற் சாந்தத்தா லவர்க்கு வேண்டும்
பூசனை யியற்றி யன்னோர் பூருவ நோக்கி வைக
மாசறு சரிதை கேட்போ னிருப்பது வடக்கு நோக்கி.

### பிரமோத்தரகாண்டம்

நாய கன்கதை நாடோறுங் கேட்குநர்
தூய நீரினிற் றோய்ந்துவெண் ணீறணிந்
தேய நித்த கரும மியற்றிப்பின்
காய வைம்புல னுங்கருத் தொன்றியே.

வல்ல தேசிக னுக்கு மணித்தவி
சொல்லை நல்கி யுறுபொரு வீந்துநன்
கல்ல வாணி கிளத்த வடங்கிவன்
புல்ல ரானவ ரைப்புறம் போக்கியே.

பத்தி யோடொல்கு பாவகத் தோடுறா
வொத்த நற்றவி சேற லொழித்து நூல்
வித்த கற்குக்கீழ் மென்றவி சொன்றியே
சித்தம் வேறறக் கேட்பது செவ்விதால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணபடன விதி

## சிவதருமோத்தரம்

புத்த கத்தினைப் பூசை புரிகிலார்
சித்தங் கூர்தரத் தேசிகன் றன்னையு
மத்த கைப்பல நீங்குவ தன்றியுங்
கொத்தை சேர்நிர யக்குழி கூடுவார்.

ஆத லாற்புத்த காதி யருச்சனை
காத லாற்செய்க காமுறு வார்பலம்
வேத னாநர கக்குழி வேண்டிலா
ரேதெ னுந்தம சத்திக் கிசையவே.

## சைவசமயநெறி

படிக்கும் பொழுது பணிக்குர வன்றாண்
முடிக்கும் பொழுது முயன்று.

26. நாடோறும் புராணந் தொடங்கும்போதும் முடிக்கும்போதும் காப்புச் சொல்லல் வேண்டும். 'காப்புக்கு முன்னும் பின்னும் "திருச்சிற்றம்பலம்" என்று உச்சரித்தல் வேண்டும். காப்புச் சொல்லும்பொழுது யாவருங்கும்பிட்டுக்கொண்டிருத்தல் வேண்டும்.

27. புராணம் வாசிப்பவர் சபையார் யாவருங் கேட்கும்பொருட்டுத் தெளிவுபெற வாசித்தல்வேண்டும். வாசிக்குங்காலத்துக்கும் எடுத்துக்கொண்ட விஷயத்தினது குணத்திற்கும் ஏற்ற இராகத்தில் வாசித்தல் வேண்டும். எச்சுதியில் எவ்விராகத்தில் வாசிக்கப்படுகின்றதோ அச்சுதியில் அவ்விராகத்திற்றானே பொருள் சொல்லப்படல்வேண்டும். இலக்கணப் பிழையில்லாமலும், வெளிப்படையாகவும், இன்றியமையாத இடங்களில் விரிவாகவும் பொருள் சொல்லல்வேண்டும்.

28. சிவபுராணபோதகரைச் சிவபெருமானாகப் பாவியாது மனுஷராகப்பாவிப் போரும், சிவபுராணம் படிக்குஞ்சபையிலே உயர்ந்த ஆசனத்திருப்போரும், காலை நீட்டிக் கொண்டிருப்போரும், சயனிப்போரும், நித்திரை செய்வோரும், வெற்றிலை பாக்குண்போரும், உடம்பு போர்த்துக்கொள்வோரும், பிறவார்த்தைகளைப் பேசுவோரும், குதர்க்கஞ் செய்வோரும், பொறாமையினாலே பிறிது பொருளைக் கற்பிப்போரும், அன்பின்றிக் கேட்போரும், சிரிப் போரும், இடையில் எழுந்து பிறிது கருமத்திலே செல்வோரும், புராணத்தைப் பொய்யென் போரும் நெடுங்காலம் நரகங்களிலே கிடந்து துன்பம் அனுபவித்துப் பின்பு இழிவாகிய பிறப்புக்களிலே பிறந்து வருந்துவார்கள்.

## உபதேசகாண்டம்

அறந்த ருஞ்சிவ புராணமோ துறுமவை யகத்துப்
பிறங்கு வெள்ளிலை நுகர்பவர் பிறமொழி பகர்வா
ருறங்கு கின்றவர் நீட்டுறுங் காலின ருவற்றைத்
திறம்பு பொய்மையென் றுரைப்பவர் களிபடச் சிரிப்போர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணபடன விதி

படர்ந்த வேணிப் பரமன் றிருக்கதை
கிடந்த சேக்கையிற் கேட்கு மறிவிலோர்
மிடைந்த மால்வரை யுச்சி விடர்புகுந்
தடைந்த மாசுண மாகிப் பிறப்பரே.

ஈசன் காதைசொல் வானன்றி யின்னுமோர்
தேசி கன்பிற னுண்டென்று செப்புமோ
காசு தீர்க்குங் கதைவிளக் கங்கொடு
மாசின் மாக்கண் மனவிரு ணீக்கலால்.

29. சிவபுராணத்தை முதற்றொடங்கி முடிவுவரையும் இடைவிடாது நியமமாகக் கேட்டல்வேண்டும். தினந்தோறும் ஒவ்வொரு சிவபக்தருக்கு அன்னங்கொடுத்தல்வேண்டும். புராணம் ஆரம்பித்தகாலத்தினும், திருக்கல்யாண முதலிய சுபசரித்திரங்கள் படித்த காலங்களினும், காண்டங்கள் முடிந்த காலங்களினும், புராணமுடிந்த காலத்தினும், சிவனடியார்களுக்கும், பிராமணர்களுக்கும், இயன்றமட்டும் அன்னதானஞ்செய்து, புராண போதகருக்குப் பூசை பண்ணி வஸ்திரம் ஆபரணம் முதலியவை கொடுத்தல் வேண்டும். புராணமுடிந்தபின், புராணத் திருமுறையையும் போதகரையும் மங்கலவாத்தியங்கள் ஒலிக்க வீதிவலஞ் செய்வித்தல் வேண்டும்.

### உபதேசகாண்டம்

ஆதிதொட்டீறு காறு முடக்குறா தருளிற் கேட்க
வோதிய புராணத் தெம்மா னுமையினை மணக்கு நாளிற்
காதுவேற் குமரற் கம்பொற் கதிர்முடி கவிக்கு நாளிற்
றீதறு தெய்வ யானை திருமணஞ் சிறக்கு நாளின்.

மறையவர்க் கினிய வேண்டும் போசன மரபி னீந்து
நிறைதமிழ்ப் புராண காதை நிகழ்த்தினோர்ப் பணிந்து போற்றி
யுறுகதிர்ப் பசும்பொ னாடை பொலங்கல னுவந்து நல்கி
நறைகம ழலரிற் சாந்தி னருச்சனை நடத்தல் வேண்டும்.

30. சிரத்தையோடு சிவபுராணபுத்தகத்தை எழுதிச் சிவனடியார்களுக்குக்கொடுத்தவரும், எழுதித் தம்வீட்டில் வைத்துப் பூசைசெய்தவரும், சிவபுராணத்தை வாசித்தவரும், அதற்குப் பொருள்சொன்னவரும், அதனைக்கேட்டவரும் சிவபதமடைவர்.

### உபதேசகாண்டம்

எழுதி யோர்ந்துண ரெம்முழைச் சரிதைகேட் டிருப்பவ ரிரக்கங்கூர்ந்
தழுதல் விம்முத னாத்தடு மாறுத லணிமயிர்ப் புளகெய்தித்
தொழுத லெய்தினோர் பெறுகுவ தியாமலாற் சொலற்கரி தெவர்க்கேனும்
பழுதி னான்மறை நுணுக்கமு மின்னணம் பகர்வது பல்லூழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணபடன விதி

இழுதை மாக்கண்மற் நீங்கிவ ரிறுதியிற் றென்பாற்
செழுக நீடிய நெடுங்குழிச் செலற்கரு நிரயத்
திழிவ ராங்கது விழுங்கிமீண் டெதிரெடுத் துமிழ
வழுவி மற்றது விழுங்குற வருந்துவர் நெடுநாள்

## பிரமோத்தரகாண்டம்

எக்கு லத்தவ னாயினு மீர்ஞ்சடை
முக்க ணான்கதை யோது முதல்வனை
மக்க ளுள்ளிவ னும்மக னென்பவர்
கக்கு வாய்புழுக் கான்றிடு நோய்கொள்வார்.

ஆன்ற காதையின் மேல்விருப் பற்றவர்
தோன்று முற்கதை பொய்யென்று சொல்பவர்
மூன்று கோடி நரகத்தின் மூழ்கியே
நான்ற நாவுடை நாய்ப்பிறப் பெய்துவார்.

அன்றிக் கேட்கு மிடத்தழுக் காற்றினாற்
கன்றி வேறோர் பொருளினைக் கற்பிப்பா
ரொன்ற லாத துரைத்தெதிர் வாதிப்பார்
பன்றி யாயிந்தப் பாரி லுதிப்பரே.

அன்பி னிற்கதை கேட்ப தலாற்பிறர்
வன்பி னெய்தி மனம்வைத்துக் கேட்பவர்
துன்ப மெய்து சுடலையி லோங்கிய
வின்ப மில்கனி யெட்டிய தாகுவார்.

கூறு மாக்கதை கூட்டுமு னாப்பணே
வேறு தங்கரு மத்து விரைந்துபோஞ்
சீறு சிந்தையர் செல்வத்தைத் துய்க்குங்கா
லீறு செல்லா திடையி லிழப்பரே.

மஞ்ச மேறியும் வெள்ளிலை மாந்தியு
நஞ்ச முண்டவர் நற்கதை கேட்குந
ரஞ்சி யோவென் றரற்றிக் கழுநுனைத்
தஞ்ச மாகக் கிடந்து தவிப்பரே.

கயிலை யண்ணல் கதையை நிகழ்த்துழித்
துயில்டு ரிந்திடுந் தொல்வினைப் பாதகர்
வெயில் கரந்தடு வெங்கொடிக் கஞ்சியே
யயின்முட் டாப்பிறை கூகையா தாகுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணபடன விதி

கள்ளு யிர்த்தபூங் கொன்றையா னருட்சிவ காதை
யெள்ளில் சிந்தையால் விதிமுறை யினிதுகேட் டுவந்து
வெள்ள வார்சடை யெம்பிரான் றிருவருள் விளைவித்
தெள்ள ருங்கதி புகுந்தவர்க் கிலக்கமா ரிசைப்பார்.

ஓது நாவினுங் கேட்பவர் செவிட்லத் துள்ளுந்
தீதில் சிந்தையோர் சிரத்தினுந் திருவரு ளிரங்கி
மாது பாகனுற் றுறைகுவன் மாதவத் துறையீ
ராத லாற்கதி யடைந்தன கேட்டவை யனைத்தும்.

எழுதி யன்பருக் கீந்தவர் திருமுறை யெழுதித்
தொழுது தம்மனைத் தொகுப்பவர் பெருநலந் துய்த்தீண்
டொழுகு காலம்வீற் றொவ்வொரு கற்பமோ ரெழுத்திற்
கழிவி லாப்பெருங் கயிலையுற் றருங்கதி யடைவார்.

திருச்சிற்றம்பலம்

*****

சகல வேதாந்திகளின் சாரத்தையும் உள்ளடக்கினதாய் ஐம்பது கண்டங்களாற் புனையப்பட்டதாய் ஓரிலக்கங் கிரந்தமுடையதாயிருக்குங் கந்தபுராணமானது சனற்குமாரசங்கிதை, சூதசங்கிதை, பிரமசங்கிதை, விட்டுணுசங்கிதை, சங்கரசங்கிதை, சூரசங்கிதை என ஆறுசங்கிதையுடையது. அவற்றுள், சனற்குமாரசங்கிதை ஐம்பத்தையாயிரங்கிரந்தமும், சூதசங்கிதை ஆயிரங்கிரந்தமும், பிரமசங்கிதை மூவாயிரங்கிரந்தமும், விட்டுணுசங்கிதை ஐயாயிரங்கிரந்தமும், சங்கரசங்கிதை முப்பதினாயிரங்கிரந்தமும், சூரசங்கிதை ஆயிரங்கிரந்தமுமுடையன. முப்பதினாயிரங்கிரந்தமுடைய சங்கரசங்கிதை பன்னிரண்டுகண்டமுடையது. அவற்றுள் முற்பட்டது சிவரகசியகண்டம், அது பதின்மூவாயிரங்கிரந்தமுடையதாய், சம்பவகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம், உபதேசகாண்டம் என ஏழுகாண்டங்களையுடையதாயிருக்கும். அவற்றுள், முதலாது காண்டத்தை, கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் கந்தபுராணமெனப் பெயரிட்டுத் தமிழில் அருளிச்செய்தார். ஏழாவதாகிய உபதேசகாண்டத்தை கோனேரியப்பமுதலியார் தமிழில் அருளிச்செய்தார்.

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதங்கள்

## (தோற்றுவாய்)

உலக வாழ்க்கையின் அடிப்படையுண்மைகளை ஆய்ந்து கண்ட பெரியோர்கள் ஓர் உண்மையினை வெளிப்படுத்தியுள்ளனர். இவ்வுலகினை நடாத்தும் முழுமுதற் பொருள் உண்டு என்பதே அது. அம்முழுமுதற் பொருளைச் சார்ந்தே நாம் உய்தி பெற முடியும் என்பதும் தெளிவு. இம்மை வாழ்க்கையை நாம் தொடங்கும் பொழுது கடவுட் சிந்தனையுடையவராக இருத்தல் வேண்டும். "தெய்வம் என்பதோர் சித்தம்" உண்டாவது இலகுவான காரியமன்று. அதனைப் பெற இடையறாது கடவுள் வழிபாட்டில் நிற்றல் வேண்டும்.

பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்றுள்ளோம். இவ்வேளையே பெறுதற்கரிய பிரானடியைப் பேணித் தொழுதல் வேண்டும். இம்மையின்பம் அனுபவிக்கும் பொழுதே மறுமைக்குரிய நன்னெறிக்கும் உகந்த தவ விரத ஒழுக்கங்களை அநுட்டித்து ஒழுக வேண்டும். இதனை விடுத்து "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்று கொண்டு மனம் போன போக்கிற் சென்று பிணி, கவலை, சாக்காடைத் தழுவி வாழ்வைப் பாழாக்கல் வருந்தத்தக்கது.

எம் வாழ்வைப் புனிதப்படுத்தி மேனிலையடைதற்காக ஆகமத்திற் பல விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் நித்திய கரும அநுட்டானங்கள், திருவிழாக்கள், விரதங்கள், என்பன பிரதானமானவை. நாம் நித்திய கரும அநுட்டானங்களைத் தினந்தோறும் செய்து வரவேண்டும். அவ்வக்காலங்களில் முறைப்படி விரதங்களை மேற்கொள்ள வேண்டும். இவற்றால் சிவபுண்ணியம் உண்டாகும். இங்ஙனம் தொடர நம் கன்ம வினைப்பயனும் அனுபவித்து முடிக்கப்படும். பின்னர் சிவபுண்ணியப் பயனாகிய சிவனெனும் மெய்ப்பொருளைச் சாருதல் திண்ணம்.

விரதமாவது:

இங்கு விரதம் பற்றிய சிந்தனையை முதலில் சிந்திப்போம் விரதம் மனக்கட்டுப் பாட்டோடு சம்பந்தப்பட்டது. "மனமது செவ்வையானால் மந்திரஞ் செபிக்க வேண்டாம்" என்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர்.

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன் ஆகுல நீரபிற" என்பது பொய்யா மொழி ஆகும். மனத்தின் கண்ணே குற்றமில்லாதிருத்தலே மிகப்பெரிய தருமம். மன மாசு தீரவே தவ, விரதங்களைப் பெரியோர் மேற்கொள்ளுகிறார்கள். மனதைக் கட்டுப்படுத்தி மாசு தீர்க்க வழி எது? அதனைத் தெரிந்து விட்டால் நாம் உய்ந்தோம் மனதுக்கு உபகாரப்பட்டு நம்மைச் சிதைக்க நம்மிடத்திலே ஐந்து பேர்கள் உளர். அவர்கள் தாம் மெய், வாய், கண், மூக்கு, செவி, என்ற பஞ்சபொறிகள். இவற்றை இந்திரியங்கள் என்றும் அழைப்பர். "இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய்" அலைவதை மணிவாசகப் பெருந்தகையும் தமது திருவாசகத்தில் அழகாகக் கூறியிருக்கிறார். ஆகவே, மனம் பொறி வழிச்சென்று நம்மை அலைக்காது இருத்தற்காகவே பெரியோர்கள் விரதங்களை வகுத்துள்ளார்கள். அவ்விரதங்களும் தெய்வங்கள் பெயரில் ஆக்கப்பட்டுள்ளன.

இனி விரதமாவது யாது என்பதனைச் சிந்திப்போம். விரதமாவது மனம், பொறி வழிச்சென்று அலையாது இருத்தற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மன மொழி மெய்களால் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேஷமாக வழிபடுதலாம்.

விரதங்களுக்கு மிகவும் பொருத்தமான காலம் ஆலயங்களின் திருவிழாக் காலங்கள். இதனைப் பெருவாய்ப்பாக மக்கள் கொள்வதால் திருவிழாக்களும் பொலிவு பெறுகின்றன, மக்களின் நித்தியகரும, அநுட்டானங்களும் ஒழுங்காக நடைபெறுகின்றன. மூன்றும் ஒன்றாய் அமைவதால், சிவபுண்ணியம் வளர மிகவும் வாய்ப்புள்ளது. சிறப்பாக அவ்வக்காலங்களிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வவ் விரதங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

விரதங்கள் வாரவிரதங்களென்றும், திதிவிரதங்களென்றும், நட்சத்திரவிரதங்களென்றும் மூன்றாக வகுக்கப்பட்டுள்ளன.

## சிவவிரதம்

சிவவிரதம் சோமவார விரதம், திருவாதிரை விரதம், உமாமகேசுர விரதம், சிவராத்திரி விரதம், கேதார விரதம், கலியாணசுந்தர விரதம், சூல விரதம், இடப விரதம், என எட்டாம் பிரதோஷ விரதமுஞ் சிவவிரதமாகும்.

## தேவிவிரதம்

தேவிவிரதம் சுக்கிரவார விரதம், ஐப்பசி உத்தர விரதம், நவராத்திரி விரதம் என மூன்றாம்.

## விநாயகவிரதம்

விநாயகவிரதம் சுக்கிரவார விரதம், விநாயகசதுர்த்தி விரதம், விநாயகசட்டி விரதம் என மூன்றாம்.

## சுப்பிரமணியவிரதம்

சுப்பிரமணியவிரதம் சுக்கிரவார விரதம், கார்த்திகை விரதம், கந்தசட்டி விரதம் என மூன்றாம்.

## வைரவவிரதம்

வைரவவிரதம் மங்கலவார விரதம், சித்திரைப்பரணி விரதம், ஐப்பசிப்பரணி விரதம் என மூன்றாம்.

## வீரபத்திரவிரதம்

வீரபத்திரர்விரதம் மங்கலவார விரதம் என ஒன்றேயாம்.

## பொது

**விரதம் அநுட்டிப்பவர் அவ்விரத தினத்தில் கடைப்பிடிக்கவேண்டியன:**

காமம், கோபம் முதலிய குற்றங்களெல்லாவற்றையும் பற்றறக்களைதல் வேண்டும் தவறாது வைகறையில் நித்திரை விட்டெழுந்துவிடல் வேண்டும்; புண்ணிய தீர்த்தத்தை அடைந்து, விபூதி, வில்வத்தடிமண், தருப்பை, கோமயம், எள் என்பவைகளைச் சிரசிலே வைத்துக் கையிலே பவித்திரஞ் சேர்த்துச் சங்கற்பஞ் சொல்லி, ஸ்நானஞ் செய்தல் வேண்டும். தியானஞ், செபம், பூசை, ஆலயதரிசனம், பிரதக்ஷிணம், புராண சிராவணம் முதலியன விசேஷமாகச் செய்தல் வேண்டும்; திருக்கோயிலிலே இயன்ற மட்டும் நெய் விளக்கேற்றல் வேண்டும்; அபிஷேகத் திரவியம், நைவேத்தியத் திரவியங்கள் கொடுத்தல் வேண்டும்; போசனம் பண்ணுமிடத்துச் சிவனடியார் ஒருவரோடாயினும் போசனம் பண்ணல் வேண்டும். நித்திரை செய்யுமிடத்து, இரவிலே, கோமயத்தினாலே மெழுகப்பட்ட தரையிலே, தருப்பையின் மேலே, கடவுளைச் சிந்தித்துக் கொண்டு, அதி சுந்தரராய் நித்திரை செய்து, வைகறையில் எழுந்துவிடல் வேண்டும்; உபவாச தினத்துக்கு முதற்றினத்திலே ஒரு பொழுது அபராணத்திலே போசனஞ் செய்தல் வேண்டும். உபவாச விரத தினத்திற்கு மற்றைய நாட் காலையிலே நித்திய கருமம் முடித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு, மகேசுர பூசை செய்து, ஆறுநாழிகையுள்ளே சுற்றத்தாரோடு பாரணம் பண்ணல் வேண்டும். பாரணம் பண்ணிய பின் பகலிலே நித்திரை செய்யாது, சிவபுராணங்களை கேட்டுக் கொண்டிருத்தல் வேண்டும். நித்திரை செய்தவர் சற்பிராமணர், நூற்றுவரைக் காரணமின்றிக் கொன்ற மகா பாதகத்தை அடைவர். (பாரணம்-உபவாசத்திற்குப் பின் செய்யும் போசனம்)

விரதங்களை முறைப்படி அநுட்டித்து முடித்தல் வேண்டும். முடித்தலை உத்தியாபனஞ் செய்தல் என்றும் கூறுவர். தொடங்கிய விரதத்தை இடையில் விடுவோரும், உத்தியாபனஞ் செய்யாதோரும் விரத பலனை அடையார்.

## நித்தியகரும அநுட்டானம்

காலைவிழித்தெழுதல் முதலாக இராப்போசனம் பண்ணி உறங்குதல் வரை தினமும் தவறாது செய்யவேண்டிய கருமங்களை ஆறுமுகநாவலர் தமது சைவ வினா விடையில் தந்திருக்கிறார்கள். மற்ற உயிர்களைக் காட்டிலும் மனிதன் மேலானவன். அவன் செய்யவேண்டிய தினக்கடமைகளும், முக்கியமானவை. அதில் இருந்து தவறுவானாயின் அவன் மனிதனாகமாட்டான்.

"காலை எழுந்திருத்தல், காணாமலே புணர்தல், மாலை குளித்து மனை புகுதல், உற்றாரொடு உண்டல், உறவாடல், இவ்வைந்துங் கற்றாயோ காக்கைக் குணம்" என்பன காக்கையின் நித்திய கருமங்கள். அங்ஙனமாயின் அறிவாற்றல் மிக்க மனிதர்களின் நித்திய கடமைகள் . எவை? அவை எங்ஙனம் நடைபெறவேண்டும்? என்பன நாம் தெரிந்திருக்க வேண்டியன.

சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னே நித்திரை விட்டெழுதல் வேண்டும். இதனை (காலையல்ல) அதிகாலை என்பர். சரியாகப் பழையநேரம் 4 மணியாகும். இங்கு விவரிக்கப்படும் விடயங்கள் அனைத்தும் சுகாதாரத்தை அடிப்படையாகக் கொண்டவையே. சமயவழிபாடுகூட அந்நெறி பற்றியவையேயென்று நாம் தெரிதல் வேண்டும். பின்னர் முகங்கழுவி, வாய் கொப்பளித்து, விபூதி தரித்துக்கொண்டு இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும். எவ்வித இடையூறுமின்றி இராப்பொழுதைக் கழிக்க இறைவன் உதவினானே என்பதற்கு நன்றிக்கடனாகச் செய்யப்படுவதே காலைப் பிரார்த்தனை.

"காலை எழுந்தவுடன் படிப்பு" என்பது பாரதியார்வாக்கு. அது யார்க்கும் நல்லநெறியே பின்பு காலைக்கடன்களை முடிக்கவேண்டும். "காலை மாலை மலசல வாதி" என்பார்கள். அதனைக்காலங்கடத்தாது, நாளும் நியமம் தப்பாது செய்து வரவேண்டும். இன்றேல் நோய்வாய்ப்பட்டு அல்லற்படவேண்டி ஏற்படும். காலையில் மலசலம் கழித்து அதனைத் தூய்மை செய்து கொண்டு, தந்த சுத்தி செய்தல் வேண்டும். இதனைப் பல்துலக்குதல் என்பார்கள். "ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்பார்கள். அன்றைய பழக்கம் விடுபட்டு, இன்று மருத்துவ முறை கூறுவது போலச்செய்து, அதனையுங் கழுவி தூய்மை செய்யவேண்டும். அதன் பின் ஸ்நானம் செய்தல் வேண்டும்.

ஸ்நானம் மூன்று வகைப்படும். சிரஸ்நானம், கண்டஸ்நானம், கடிஸ்நானம் என்பவையே அம்மூன்றுமாம். நாம் பெரும்பாலும் கண்டஸ்நானம் செய்து வருகிறோம். கழுத்துக்குக் கீழ் (முகம் சேர்த்து) ஸ்நானம் செய்கிறோம். இதனை யாழ்ப்பாண வழக்கில் குளித்தல் என்பார்கள். சிரஸ்நானம் பண்ணுதலே முறையானது. மற்றஸ்நானம் செய்வோர் ஈரத்துணியால் தலையைத் துடைத்துவிடல் வேண்டும்.

ஸ்நானம் செய்தபின் தூய்மையான துணியினால் ஈரம் துவட்டியபின் தோய்த்துலர்ந்த வஸ்திரத்தைத் தரித்தல் வேண்டும். ஸ்நானம் செய்யும்போது தோய்த்த துணிகளை உலரப் போட்டு அடுத்த நாள் உபயோகிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்நானத்துக்குப்பின் தூய்மையான இடத்தை ஒழுங்கு செய்து அமர்ந்திருந்து (ஆசனம் மான் தோல், பலகை என்பன) சுத்த நீர் ஒரு பாத்திரத்தில் எடுத்து, விபூதியும் அளவாய் வைத்துக்கொண்டு அநுட்டானம் பண்ணி, பஞ்சாட்சரசெபஞ் செய்து தோத்திரம்பண்ணுதல் வேண்டும். இக்கருமம் தினமும் சிவதீட்சை பெற்றோரால் செய்யப்பட வேண்டும். 7 வயதில் சமயதீட்சை பெறுதல் சைவர்களின் தலையாய கடமையாகும். சிவதீட்சை பெறாதவர் சைவக்கிரியைகளில் பங்குபற்ற அருகதையற்றவர்களாவர்.

அநுட்டானம் முடித்துக்கொண்டு சிவாலய தரிசனம் செய்வது சிறந்ததாகும். விசேட தினங்களிலும், விழாக்காலங்களிலும் பலரும் சிவாலயங்களுக்குச் செல்வர். ஒரு சிலரே தினமும் சிவாலயங்களுக்குச் சென்று வழிபடுவர். இதன் பின்பே போசனம் பண்ணுதல் வேண்டும். ஒவ்வொரு கருமத்தையும், எப்படிச்செய்தல் வேண்டும் என்பதனைச்சைவவினா விடையில் விரிவாக எழுதியிருக்கிறார் ஆறுமுகநாவலர் அவர்கள். அதனைப் படித்து அங்ஙனம் ஒழுகுதல் சைவ சமயத்தவர் கடமையாகும்.

இங்கு கூறப்பட்டவைகளை விட ஒவ்வொருவருக்கும் தங்கள் கடமைகள் உண்டு. அவற்றினையும் ஒழுங்காக நிறைவேற்ற வேண்டும். அதனிடையே காலை, உச்சி, மாலை, இரவு என்ற வேளைக்குரிய நித்தியகருமங்களையும் செய்யவேண்டும். மாலையில் சந்தியாவந்தனம், இரவு கடவுள் வழிபாடு என்பனவும் உண்டு. இராப்போசனமுண்டு உறங்கும் முறைகள் சைவ வினா விடையில் காட்டப்பட்டுள்ளது. இவை சமயசாரத்தோடு சுகாதார முறையையும், கொண்டிருப்பதால், நாம் அதில் சிரத்தைகொள்வது நன்று.


ஆலய உற்சவங்களில் வழிபாட்டுக்குச் செல்வதற்கு முன்பும் விரதங்களை அநுட்டிக்குங் காலங்களிலும் புராணபடனத்தில் பங்குபற்றும் காலங்களிலும் நித்தியகர்மானுட்டானங்களை ஒழுங்காகச் செய்து வரவேண்டுமென்பது தொன்றுதொட்டு இன்று வரை ஒரு நியதியாகவுள்ளது.

புராணபடனத்தில் பங்குகொள்ளுவோர் சிவதீட்சை பெற்றிருக்க வேண்டுமென்பதும், அதனை மேற்கொள்ளும் போது அநுட்டானத்தை முடித்துக்கொண்டு சீலமுடன் பங்குபற்ற வேண்டுமென்பதும் விதியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Few Vaastu rules of building a house to have good effects*

1 *Keep open space on all sides.*
2 *More open space in North than the South.*
3 *More open space in East than the West.*
4 *The height of the building should be more on South and West than North and East.*
5 *Multi - Storeyed building, Terrace should be left towards North or East.*
6 *Balconies should be towards East or North.*
7 *More window openings should be towards East and North than West and South.*
8 *Thicker walls should be built on west and South than East and North.*
9 *More doors and openings should be towards North and East than West and South.*
10 *The Compound walls of South and West should be thicker than North and East.*
11 *Gate should be on the North or East direction.*
12 *South road facing house: The Gate should be on South or South East but not on the South West.*
13 *West road facing house: The Gate should be on West or North West but not on the South West.*
14 *South - West room should be the Master Bed Room.*
15 *South - East room should be the Kitchen.*
16 *North - East room should be the Pooja Room.*
17 *Bath room should be in East. If inconvenient South East or North West could be recommended.*
18 *The number of the doors or windows should be of even number.*
19 *Verandahs should be designed is East or North.*
20 *The level of the verandah roof should be less than the normal roof.*
21 *No verandahs should be in West or South.*
22 *Portico should be designed in North East or East or North.*
23 *Roof level of the portico should be equal or less than verandah.*
24 *Staircase should be in South West.*
25 *Overhead tank should be either in South or West not on South West.*
26 *Outhouses in South East or North West. They should not touch North and East walls. Height should be less than main house.*
27 *Car garages should be along with outhouses on the same principle.*
28 *Septic tanks in North West or South East.*
29 *Water Sumps in the North East below the ground level.*




*Prepared by M. P. S. Paladurai*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINTED BY [illegible], WATTALA